செய்தி வெளியீடு எண்: 839 நாள்: 29.9.2010

# அறிவிப்பு

## தமிழ்நாடு அரசு

## மருந்தியல் பட்டயப்படிப்பு 2010-2011 இரண்டு ஆண்டு பாடத்திட்டம்

## மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை - 625 020.

2010-2011 ஆம் ஆண்டுக்கான மதுரை மருத்துவக் கல்லூரியில் தொடங்க இருக்கும் இரண்டு ஆண்டு மருந்தியல் பட்டயப்படிப்பிற்கு மாணவர்களைச் சேர்க்க மதுரை மருத்துவக் கல்லூரி முதல்வர் அலுவலகத்தில் 01.10.2010 காலை 10.00 மணி முதல் 15.10.2010 மாலை 05.00 மணி வரை விண்ணப்பப் படிவம் மற்றும் விளக்கப்படிவம் வழங்கப்படும். பூர்த்தி செய்த விண்ணப்ப படிவங்கள் 15.10.2010 ஆம் தேதி மாலை 05.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்கு பின்வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**கல்வித் தகுதி :**

மருந்தியல் பட்டயப்படிப்பு-பகுதி 1 சேர்க்கைக்கு குறைந்த பட்ச தகுதி கீழ்காணும் தேர்வுகளில் ஏதேனும் ஒன்றில் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் அல்லது கணிதம் ஆகிய பாடங்களுடன் கூடிய தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

01) அறிவியலில் இண்டர்மீடியட் தேர்ச்சி

02) மூன்றாண்டு அறிவியல் பட்டப் படிப்பில் முதலாமாண்டு தேர்ச்சி

03) அறிவியலில் 10 +2 அகாடமிக் (Academic) தேர்ச்சி

04) பட்டப் படிப்பிற்கு முந்தைய தேர்ச்சி

05) இந்திய பார்மசி கவுன்சிலால் அங்கீகரிக்கப்பட்ட மேற்கண்ட தேர்வுகளுக்கு இணையான கல்வித் தகுதி.

ஒகேஷனல் பிரிவில் பயின்ற மாணவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள் ஆவர்

தமிழ் நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமே இப்படிப்புக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலும் விபரங்களுக்கும், விண்ணப்பப் படிவம் மற்றும் விளக்கப் படிவம் ஆகியவற்றுக்கும் முதல்வர், மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரைக்கு கீழ்க்கண்டவற்றுடன் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அணுகவும்.

01) முதல்வர், மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை என்ற பெயரில் இந்த விளம்பரம் நாளிதழில் வந்த தேதிக்கு பின் வாங்கப்பட்ட ரூ.12/- ( ரூபாய். பன்னிரெண்டு மட்டும் ) மதிப்புள்ள குறுக்குக் கோடிடப்பட்ட தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட கேட்பு வரைவோலை.

02) சுய விலாசமிட்டரூ.25க்கான தபால் தலை ஒட்டப்பட்ட தபால் உறை 30x12.5 c.m. ( தபால் மூலம் பெற விரும்புவர்களுக்கு மட்டும் )

03) மேற்கூறப்பட்ட படிவங்களைக் கேட்டு ஒரு விண்ணப்பம்.

முதல்வர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை-9